# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1979 ★ இதழ் - 39


## குழந்தைகள் ஆண்டும்
## குதூகலச் செய்தியும்



மில்க்வைற் தயாரிப்புகளில் ஒன்ருன சலவைப்பவுடர் புதிய முறையில் மட்டைப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு வெளியான போது முதலில் கொள்வனவு செய்யும் கல்கி சின்னத்துரை அவர்கள்

உலகமெங்கும் குழந்தைகள் ஆண்டு கொண் டாடப்பெறும் இவ்வேளையில், எங்கள் குழந்தைகள், பெண்கள் உட்படப் பிரமிப்படையக்கூடிய அளவில் பரீட் சைப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். அவர்களும் ஆசிரியர்களும் பெற்ருேர்களும் அகமகிழும்போது நாமும் மனமகிழ்வோடு பாராட்டுத் தெரிவிக்கிருேம். சில குழந்தைகள் எல்லாப் பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்ற சிறப்புப் பெரிதும் குதூகலிக்க வேண் டியது, பாராட்டப்பட வேண்டியது.

இவர்கள் இங்ஙனமே ஏனைய பரீட்சைகளிலும் படியேறிப் பட்டதாரிகளாய், பண்பட்டவர்களாய் பயன்பட்டவர்களாய் வாழ வழிவகுத்துக்கொள்ளுதல் வேண்டும். கல்வியில் உன் கவனத் தையும் கருத்தையும் இறக்கு என்று ஆறுமுகநாவலர் குழந்தை களுக்கு எழுதியுள்ளார்.

சிறுவரைக் குலக்கொழுந்துகள் என்பார்கள். சிறுவரைப் பாது காத்து வளர்த்து மனிதராக்கிவிடுவது பெற்ருேர் ஆசிரியர் அரசு ஆகிய முத்திறத்தாரின் முதன்மையான கடனாகும். குழந்தைகள் விளையாட்டு நேரத்திலும் சமூகத்துக்காக வாழுதல் வேண்டும் என்னும் பழக்கத் தைப் பழகுகின்ருர்கள். தனி முறையைத் தவிர்த்துக் குழு முறையைப் பழகிக் கொள்ளும் விளையாட்டுக்கள் கிரிக்கற், புற்போல் முதலியனவும் இன்னும் பிறவுமாம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ நற்குணத்தைவிட உறுதியான கவசம் உலகில் இல்லை ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர்

திருவொற்றியூர் — திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

அங்கட் கடுக்கைக்கு முல்லைப் புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்கும் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானம் திருவொற்றி யூரர் திருமுடியே.

திருச்சிற்றம்பலம்

அழகிய கொன்றைக்கும் முல்லைக்கும் அவை வளரும் கொல்லையாகவும், பல்வெளியே தெரியக்கிடக்கின்ற (கபால) தலை மாலைக்குச் சுடுகாடாகவும், பரிய மணிகளாய முத்து பவளம் முதலியவற்றை ஒதுக்கிப் பாய்கின்ற கங்கையாறு சங்கமிக்கின்ற கடலாகவும், பாம்பு வாழும் பெரிய புற்ருகவும், இளம்பிறை சஞ்சரிக்கின்ற பெரிய வான வெளியாகவும் திருவொற்றியூர் இறைவர் திருச்சடை விளங்குகின்றது. ★

## திருவொற்றியூரர்

திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள 'எழுத்தறியும் பெருமான் என்னும் திருநாமம் உள்ள இறைவனுக்கு அழகு செய்யும் பிறை, முன்னம் அவர் யானையை உரித்தபோது வெளியே தோன்றிய அதன் வெண் கொம்பு போலவும், பிறையைச் சுற்றியுள்ள பாம்பு, யானைக் கொம்பைச் சுற்றியமைந்த கிம்புரிபோலவும், அவரின் நெற்றிக்கண், யானைக் கொம்பில் உண்டாகும் வெண் முத்துப்போலும் அமைந்துள்ளன. அவரின் சடையிலே கடல்போன்ற பெருக்குள்ள கங்கையும், மணியினைத் தருகின்ற பாம்பும், கொன்றையும், திங்களும், கோங்கும் உள்ளன. அவர் ஊர்கள் தோறும் உள்ள வீடுகள்தோறும் சென்று பிச்சையேற்று அருள் பாலிப்பவர். அவர் திருப்பாற் கடலில் எழுந்து தேவர்களை வருத்திய நஞ்சினைத் தாமேயுண்டு அங்கே எழுந்த அமுதத்தைத் தேவருக்குக் கொடுத்தருளியவர். அவரைப் பாகம் பிரியாதுடனுறையும் தேவிக்குத் தம் அரைப்பங்கினைக் கொடுத்தருளியதால் அவரின் மூன்று கண்களில் எஞ்சிய ஒன்றரைக் கண்களையுடையவராயுள்ளார். அவர் வண்டுகள் யாழ்போல ஒலிக்கும் சோலையும் காவும் நிறைந்த ஊரை ஒற்றியாகக் கொண்டருளியவர். அவர் பாண்டரங்கம் என்னும் திருக்கூத்தினை விருப்போடு ஆடுகின்ற பெருமான். பத்துத்தலை இராவணனின் வலிமையை அடக்கி அவன் அழுது தொழுதபோது வாழ்வும் வளமும் வனப்பும் வாளும் அருள்புரிந்தவர். எம்மையும் இனிப் பிறவாவகைசெய்து ஆட்கொள்ளவல்ல பிரான். அவரை எப்போதும் தொழுமின்கள்.




## படைச்செருக்கு

### சேனையின் வீரமிகுதி

பேராண்மை என்ப தறுகண் ஒன்றுக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

உறுதியாகப் போர்புரிதலைப் பெரிய வீரம் என்று பெரியோர் கூறுவர். பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின், அதனைத் தீர்த்தற்கு உதவுதல் அவ்வீரத்தின் கூர்மையாகும்.

### The Pride of the Army

Furious strike without caring for personalities in a contest is valour they say; and to show commiseration when the foe is fallen gives the edge to that valour.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## குழந்தைகள்........

குழந்தைகள் உலகநாட்டவரோடு தொடர்பு கொள்வதற்கான அமைப்புக்கள் சாரணீயம், ஒலிம்பிக் விளையாட்டு, முத்திரை சேர்த்தல், பேனு நண்பர்களின் தொடர்பு, வெளி நாட்டுப் பிரயாணம் என்பனவும் பிறவுமாம். துருவப் பகுதியில் பிள்ளைகள் என்ன செய்கிறுர்கள், வனந்தரங்களில் பிள்ளைகள் என்ன செய்கிறுர்கள் என்றெல்லாம் விடுப்பூக்கத்தோடு படித்தல் வேண்டும்.

சிறுவர் ஆண்டில் ஐக்கிய நாடுகள் முதல் உள்நாட்டு அரசாங்கம் வரையுள்ள நிறுவனங்கள் பிள்ளைகளுக்கான பல நிகழ்ச்சிகளை ஆக்கபூர்வமான நடபடிக்கைகளை எடுக்கின்றன. குழந்தைகள் உலகந் தழுவிய ஒழுக்க சீலர்களாக வாழுதல் வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

## ஈறு வேறுபடும் இலக்கியச் சொற்கள் சில

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மன்று | — | மன்றம் | மட்டு | — | மட்டம் |
| குன்று | — | குன்றம் | நெஞ்சு | — | நெஞ்சம் |
| தூசு | — | தூசம் | கூற்று | — | கூற்றம் |
| நஞ்சு | — | நஞ்சம் | அரங்கு | — | அரங்கம் |

**பிறர் பொருளைத் திருடுபவனுக்கு என்றும் இன்பமில்லை**

உ
சிவமயம்

# பரந்தனில் அமைந்துற்ற பஸ்குறு மண்டபம் இருந்த தன்மையை எடுத்துரை செய்தது

## அறுசீராசிரிய விருத்தம்

நன்ருகும் நாளொன்று காலமும் வாய்ப்பை
நல்கிய தாலே
கன்றவரு நெடுநாள் ஆசை மனசிடைக்
கனத்துக் காண
சென்றுபுளி யம்பொக்கணை நாக தம்பிரான்
பொங்கலைத் தெரிசிப்பான்
சென்றனன் பஸ்ஸில் பரந்தன் போய்ச் சேர்ந்து
இறங்கி நின்றேன். 1

மற்றைய தெருவழியே கோயில் போகும்
பஸ்ஸினைப் பார்த்து
உற்றேறிப் போக வேண்டும் ஓடிப்போய்
முந்தி இடத்தைப்
பெற்ருக வேண்டும் இங்கே சனக்கூட்டம்
பெரிதா யிருக்கே
இற்ருக வெண்ணி ஏறுதற்கு வாய்ப்புள்ள
இடமே பார்த்து: 2

முச்சந்தித் தெருவோரம் முப்பெரும் சாலைகள்
வந்து முடியுமிடம்
எச்சனமும் அங்கிறங்கித் தரித்து ஏறுவர்பஸ்
ஏற்ற வண்ணம்
அச்சந்தியிலே யாரும்போய் நின்றுபஸ் எடுப்போமென்
றகத்தே கொண்டு
வைச்சிருந்த கை'பாக்கை' எடுத்துக் கொண்டே
கொஞ்சவழி நடந்தே 3

சென்று பார்த்தேன் சனக்கூட்டம் தெருவெங்கும்
திரண்டு பல்லோர்
நின்றிடு இன்றனர்ஒரு வாபர்சலூ னில்இடம்
நெருக்க மாக
முன்னராக பஸ்ஏறிக் கொள்ள வேண்டுமேல்
அச்சலூன் மூலைதான்
நன்னர் வாய்ந்த இடமென்று பிறர்நிற்க
நானுங் கண்டு 4

தனிப்பட்ட முதலாளி வர்த்தகர்கள் தம்கடை
வாசல் நின்ருல்
துனிப்பட்டு ஏசுவர் இடங்கொடார் சொல்லாலும்
தூஷிப் பார்கள்
நனிப்பட்ட தூரம்நான் நிற்குமிடம் பஸ்ஏற
நணுகல் இல்லை
பனிப்பட்ட வெயில் கொடிது வெப்பமும் நிலச்சூடும்
பதைக்கச் செய்யும் 5

நல்லவா ருதரித்து இடங்கொடுக்கு நன்மையாலே
அச்சலூனில் தங்கிச்
செல்லுகின் ருர்பலர் தத்தம் பயணம்
தெரிசனத் துக்கா
வல்வரவக் கச்சை யணிவான் திருக்கோயில்
வழிக்கொண் டேற்கு
ஒல்லாதென் றதனயலே ஓர்மர நிழலினையே
உவந்து நின்றேன் 6

அண்டையிலே அச்சலூன் அருகிருந்து வருஞ்சத்த
ஆர வாரம்
கொண்டிருக்க வேண்டுமங்கே சந்தையோ சத்திரமோ
கூட்டாய்க்குரல் கேட்குதே
கண்டிடுவோ மென்றெண்ணிப் போய்நான் பார்த்தபோ
துண்டாம் வியப்பு
விண்டிடவே முடியுதில்லை யுள்ளக் களிப்புமோ
விளக்க வியலேன். 7

பண்டிருக்க வில்லை இப்பாரிய கட்டிடம்
படைத்து யாரோ
கொண்டி ருக்கின்ருர் இப்போ பிரயாணம்
கொள்ளும் சனங்கள்
உண்டிருந்து இளைப்பாறி உற்றவாம் தத்தம்
பஸ்ஸை எடுத்து
கண்டிருந்த இடங்கள் போகவுப காரம்புரி
கருத்தாக் கொண்டே. 8

சரியான தானம் பஸ்வந்து தரிக்கு
மிடத்தின் மத்தி
புரிந்தன்ருே இம்மடத்தை இவ்விடத்தே பொறித்துள்ளார்
புண்ணிய சீலர்
உரிய நேரம் பஸ்வரா விட்டாலும் உண்டுறங்கி
யெழுந்து போகலாம்
அரியவரம் இவ்வுபகாரம் அளித்திட்ட பெரியாரும்
யாரோ வென்றே 9

அறிந்துவாத் தீர்ந்து கொண்டே அப்பாலே
போவோம் என்றே
வரைந்துள்ள விளம்பரமொன் றிருக்கக் கண்டதனை
வாசித்துப் பார்த்தேன்
''மில்க்வைற் சோப்பன் பளிப்''பென்றே யெழுதி
விளங்கக் கண்டேன்
வித்தகமும் இதுவொப்ப துண்டோ தர்மத்துக்கும்
வேண்டும் புத்தி 10

நல்ல வட்டிக்குப் போட்ட முதல்போல
அஃதுநாளு முயர
நல்லசற் பாத்திரர்க் கிட்டுள்ள புண்ணிய
தானம் போல
எல்லவர்க்கும் தொழுகைபுரி கோயில்போல
எழில் மிக்க
நல்ல வுண்ணீர்க் குளமொன் றூர்நடுவே
தோண்டினுற் போல 11

பத்திய மாகப்பயன் படுமிவ் மண்டபத்தைப்
பாங்கி னேடும்
நல்லபுத்தி பண்ணிக் கட்டியிட்ட உள்ளத்தை
நாமோ அளந்து
சொல்லவும் வல்லமோ இல்லை அஃது நமக்
களித்த தோற்றத்தைச்
சொல்லு கின்ருேம் நீவிர் அளவறிந்து
துணிந்து கொள்கே 12

★ சுகமும் துக்கமும் சக்கரம்போல் சுழன்று வரும் ★

சிங்கள நாட்டிருந்து வந்தபுற் பாய்கள்
சேர்குவி யலோடும்
சிங்களவர் அங்கிருந்தார் சித்திரங்கள் வைத்திழைத்த
பனம்பெட்டி பாய்கடகம்
அங்கோர் குவியல் பருத்தித் துறையார்
அமைத் திருந்தார்
பொங்கற் குரியபூசைப் பொருள்கள் வரவேற்க
ஆண்டுதொறும் போடும் 13

பேருற்ற மந்தவார் மந்தற்கால் உத்திரங்கள்
பிறபொருள்கள் அங்கே
சீர்பெறவே யடுக்கி ஓர்பால் திகழ்ந்தார்
யாத்திரீக் ரோடும்
கார்பெற்ற மயிலன்ன யாமிவற்றைக் கண்டுள்ளக்
களிப்பி னோடும்
வாரூற்ற சடையுடையான் நாகதம் பிரான்வளர்
கோயில் சென்றேன். 14

## வாழி

### எண்சீராசிரிய விருத்தம்

புண்ணிய கருமங்கள் புரிந்து வருகின்ற
புருஷர்கள் பூரணவாயுள் பொலிந்து வாழி
வண்மையுறு மில்க்வைற் தாபனத் தலைவர் வாழி
வளர் தாபனமு மென்றென்றும் வளர்ந்து வாழி
எண்ணலுறு மிவைதம்மைத் தம்மகத்தே கொண்டுவளர்
எழில்மிக்கு யாழ்ப்பாண நாடு வாழி
மண்ணகத்தே விளையுள்கள் மலிவெய்த வான்மழை
காலந்தோறும் வழுவாமே பெய்து வாழி. 15

இங்ஙனம்
பொ. ஜெகந்நாதன்

---

## அகத்தி

அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும் அது புறத்தி என்று காயை ஒதுக்கி வைத்தவர்கள் அதன் இலையையும் பூவையும் உச்சிமேற் கொண்டுள்ளனர். அகத்தியில் பல இனங்கள் உண்டு. அவை சிற்றகத்தி, செவ்வகத்தி, சாழையகத்தி என்பனவும் பிறவுமாம்.

அகத்திக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. அவை மயில்முனிவன், முனி, விட்டரி, புகள் என்பனவும் பிறவுமாம்.

### உபயோகம்

இலைக்கறிவகையிற் கீரைபோலப் பயன்படும் அகத்தியிலை மருந்துக்கும் பயன்படுகிறது. அகத்திக்கொழுந்திலைகளைக் காலையில் மென்று தின்றால் வாய்ப்புண் நீங்கும், சூடு தணியும். அகத்தியிலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து காய்ச்சி வெந்தயத்தைப் பாலிலரைத்துக் கலந்து தலையில் தேய்த்து முழுகி வந்தால் சகல சூடுந்தணிந்து தேகம் நன்றாகும். அகத்திக் கீரையை வாரத்துக்கிரு முறையாவது உண்ணல் நன்று. இதனால் பித்தம், மயக்கம் நீங்கும். அகத்திப் பூவைப் பசுநெய்யில் வதக்கி உண்டால் வெப்பமும் பித்தமும் தணியும்.

## அருள் விருந்து

ஆதாரம்—தர்மசக்கரம்

1. மனிதன் நல்லவனானல் உலகமும் நல்லதாகும்.
2. நேர்மையில் நிலைத்திருப்பதால் ஆசை ஒழிகிறது.
3. சத்தியமும் அகிம்சையும் இணைபிரியாதவை.
4. தூற்றுதலை ஏற்கவல்லவன் போற்றுதற்குரியவன்.
5. ஆசையுள்ளவனிடம் தியாகம் இருக்கமாட்டாது.
6. நல்லவனின் எண்ணம் வீண் போவதில்லை.
7. பேராசையினின்று பதைபதைப்பு உருவெடுக்கிறது.
8. தெய்வ சான்னித்தியத்தை எங்கும் காண்பவன் பாக்கியவான்.
9. அருள் நாட்டம் உள்ளவன் நெறிதவறமாட்டான்.
10. வெற்றியைப் போலவே தோல்வியும் பயன் தருவது.

## தைத்திரீயோபநிஷதம்

எதினின்று இவ்வுயிர்களெல்லாம் உதித்தன; உதித்த உயிர்கள் எதில் உயிர் வாழ்ந்திருக்கின்றன; எதில் மடிந்து ஒடுங்குகின்றன; அதை அறிந்து கொள்ள முயலுக; அது பிரஹ்மம்.

---

முற்றொடர்:

## அடுக்குமொழி

| | |
|---|---|
| சின்னஞ் சிறுசுகள் | சீறிச் சினந்து |
| சினமும் சீற்றமும் | சீறுமாறு |
| சின்னா பின்னம் | சுக்குநூறு |
| சீதனம் சீராட்டு | சுகதுக்கம் |
| சீலமும் செல்வமும் | சுட்டுப்பொசுக்கி |
| சீர்மை சிறப்பு | சுட்டு எரித்து |
| சீராட்டித் தாலாட்டி | சுத்தமும் சுகாதாரமும் |
| சீவிச் சிக் கெடுத்து | சுவையும் மணமும் |
| சீவிச் சிங்காரித்து | சுற்றிச் சுழற்றி |
| சீவிச் செதுக்கி | சுற்றும்முற்றும் |

---

முற்றொடர்:

## சிங்களத்தில் வழங்கும் தமிழ்ச் சொற்கள் சில

மட்டி, மலர், மஞ்சாடி, மட்டம், மணவாளன், மண்டி, மயிர், மைத்துனன், மாற்று, மாயம், மாறு, முதல், முறை, முனை, முனை, வெண்டிக்காய், வாசி

---

**மாலுமி முட்டாளானல் அமைதிக் கடலும் கொந்தளிக்கும்**




[பாரத தர்மம் என்பது பகவத் கீதை மாத்திரமல்ல. அதற்கு அப்பாலும் முனிவர்கள் கூறியவை பாரத தர்மத்தைச் சார்ந்துள்ளன. பாரத தர்மம் பரதகண்டத்தில் தோன்றி உலகத்துக்கே ஒளியூட்டுவதாகும்.]

அரச தர்மம் சரியாக இல்லாவிட்டால் உலகம் நிலை பெற்றிராது. கட்டுப்பாடு இல்லாமல் சிதறிவிடும். சூரிய ஒளி இருளை நீக்குவதுபோல அரச தர்மம் உலகில் தீமையை ஒழிக்கின்றது.

தர்மத்தில் சிரத்தை குறைந்து பேராசை தலையெடுத்துக் காமம் கோபம் மக்களிடம் குடிகொண்ட காலத்தில் செய்ய வேண்டியது எது, செய்யக் கூடாதது எது என்று மக்களுக்கு விளங்கவில்லை. எனவே பேசத்தகாததைப் பேசி உண்ணத்தகாததை உண்டு வந்தார்கள். அதனால் நல்லதை நாடாமல் தீயதையே நாடினார்கள். தர்மம் தலைகுனிந்தது. நல்லவர்கள் நாளும் நலிந்தார்கள்.

எனவே தர்மம், காமம், அர்த்தம் என்பனவற்றைப் பெரியவர்கள் விளக்கினார்கள். சாத்துவிகம், இராசதம், தாமசம் என்னும் மூன்று குணங்களையும் விளக்கினார்கள். கர்மகாண்டம், ஞான காண்டம், ஜீவிகா காண்டம், என்பனவற்றை விளக்கினார்கள்.

ஜீவிகா காண்டம் என்பது வாழ்க்கைக்கு வழியான பயிர்த்தொழில், வியாபாரம் முதலியனவும் அரசைக் காக்க உதவும் நீதி முதலியனவும் வித்தைகளுமாகும்.

அரச தர்மத்தில் சொல்ல வேண்டியவற்றைக் கூறும் நூல் தண்ட நீதி என்பது. அதன் வழிவந்த வாக்கியங்கள், தர்மத்தை வழுவாமல் செய், விருப்பு வெறுப்புக்களை விடு, எல்லாரிடமும் சமபுத்தியுடன் ஒழுகு. காமம், குரோதம் முதலியவற்றை ஒதுக்கு. தர்மத்தைக் காப்பதற்கு உறுதி கொள்.

இவற்றைக் கடைப்பிடித்துக் குடிகளை ரஞ்ஜனம் (மகிழ்வித்தல்) செய்பவன் ராஜன், ராஜா. அவன் க்ஷதம் என்னும் ஆபத்திலிருந்து மக்களைக் காப்பவன். க்ஷத்திரியன். தர்மத்தால் பிரதிதா (புகழ்) பெற்றதால் பூமிக்குப் ப்ருதிவி என்று பெயர் வந்தது.

நல்ல அரசனை இறை என்று திருவள்ளுவர் கூறுவர். ராஜ கம்பீர நாடாளு நாயகன் என்று அருணகிரிநாதர் புகழ்வர்,

— தொடரும்

# ★ சீந்தில் ★

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நெடுந்தீவு மக்கள் முற்காலத்தில் நூறு வயதுக்கும் அதிகமாக வாழ்ந்தார்கள். அவர்கள் நீண்டகாலம் வாழ்வதற்கு நோயணுகா விதிகளை அநுட்டித்து வந்தார்கள். நீண்டகால வாழ்வுக்கு அந்தக் காலத்து நெடுந்தீவு மக்கள் மூலிகைகளைப் பயன் செய்து வந்தார்கள். அவர்கள் கண்ட அற்புத மூலிகைகளுள் சீந்தில் என்பதும் ஒன்று. இதை அமிர்தம் என்றும், குடிச்சி என்றும், அமுதவல்லி என்றும், சாகாமூலி என்றும் கூறுவர். இன்னும் இந்த அற்புத மூலிகைக்கு அருஞ்சி, ஆகாசி, குணலி, உபவம், சீலம், சோமவல்லி, பருணி, மதிவாம்பல், சின்னருகம், வசிகரம், வள்ளிக் கண்டம், விசலி முதலிய பெயர்களும் வழங்குகின்றன.

## வளர்ச்சி

சீந்திற்கொடி ஆற்றோரங்களிலும் சமவெளிகளிலும் நன்றாக உண்டாகும். நீரில்லாமலே வாழும். அது காற்றிலுள்ள நீரணுக்களை உறிஞ்சி உட்கொண்டு தழைத்துப் படரும். காற்றிலுள்ள நீர்ச்சத்தைப் பெற்று வாழ்வதால் இதனை ஆகாய கருடன், ஆகாச வல்லி என்றும் கூறுவர். இதைத் தோட்டங்களின் மரங்களின் மேல் அல்லது வீட்டுக் கூரையின் மேல் போட்டுவிட்டால், வேர்கள் உண்டாகி நிலத்தை நோக்கி வந்து ஊன்றித் தானே வளரும். அதற்குத் தண்ணீர் ஊற்றத் தேவையில்லை.

## சீந்திற் சர்க்கரை

சீந்திலிலிருந்து தயாரிக்கும் அமுத சர்க்கரை நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் தன்மையுள்ளது. திரிதோஷங்கள் என்னும் வாதபித்த சிலேட்டு மங்களைச் சமப்படுத்தி, இரத்தக் கொதிப்பைக் குறைத்து ஆயுளை அதிகரிக்கச் செய்யும்.

மொத்தமான சீந்திற் கொடிகளை நறுக்கி மேல் தோலைச் சீவி நீக்கிவிட்டுத் தண்டுகளை உரலில் நன்றாக இடித்துத் தும்புகளை நீக்கிவிட்டு, பானையிலிட்டு நீருற்றிப் பிசைந்து உறையவிடவும். தெளிந்த நீரை வடித்து நீக்கிவிட்டு அடியில் உறைந்த சீந்திலுக்கு மேலும் நீர்விட்டுப் பிசைந்து உறையிட்டுத் தெளிந்தபின் நீரை வடித்துவிடவும். இங்ஙனம் பத்துமுறை செய்தபின் அடியில் உறைந்த சத்து வெண்ணிறமாயிருக்கும். அதை வெயிலில் உலர்த்தி உரலில் இடித்து எடுத்துப் பக்குவமாகப் பேணிக்கொள்ளவும்.

இங்ஙனம் தயாரித்த சீந்திற் சர்க்கரையைச் சிறிதளவு எடுத்துக் கற்கண்டுப் பொடி கலந்து காலை மாலை உணவுக்கு முன் உண்ணல் பயன்தரும். இதை அமிர்தம் என்று சொல்லத் தேவையில்லை. இதற்குப்பேரே அமுத சர்க்கரை என்பதாகும். ★

---

இம்சையால் வருவதாகத் தோன்றும் நன்மை, தோற்றம் மாத்திரத்தில்தான் உளது. அதனால் வரும் தீமை என்றும் நிற்கும். ஆகையால் இம்சையைத் தவிர்க்க வேண்டும்.

— மகாத்மா காந்தி

---

★ பெரியோர் வாக்கு பொய்க்காது ★

முற்றொடர்:

# குழந்தைகள் ஆண்டு

வியாச பகவான் மிகவும் பெரியவர். வேதங்களை நான்காக் வகுத்தவர். ஐந்தாம் வேதத்தை அருளியவர் பதினெண் புராணங்களைக் கண்டவர். தம் பெயரால் பெரிய அறிவு நூல் ஒன்றைச் செய்து புகழ்பெற்றவர். ஆனால் அவரின் குழந்தை சுகர் சென்ற அறிவுப் பாதையைக் கண்டு தந்தையார் வியந்தார். சுகர் பாலனாய் இருந்தபோதே சுகப்பிரமம் எனப் பெயர்பெற்ற அறிவாளியானார்.

ஒரு தலைமுறைக் காலமாக மாடு மேய்த்துவந்த ஓரிடையனுக்குத் தெரியாத கலையை அந்தணச் சிறுவன் தெரிந்து மாடுகளை அன்புடன் மேய்த்துப் பால்வளம் பெருகக்கண்டு பக்திப்பெருக்கால் சண்டேசர் பதத்தையும் பெற்றார்.

புதிதாகப் பட்டத்துக்கு வந்த அரசிளங்குமரன் ஒருவன் இரண்டு தலைமுறைக்காலம் ஆஸ்தானப் புலவராயிருந்த அறிஞரிடம் மூன்று கேள்விகள் கேட்டான். கடவுள் எங்கே இருக்கிறார்? அவர் எந்தப்பக்கம் நோக்கிக்கொண்டிருக்கிறார்? அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

இவற்றுக்குத் தக்க விடை சொல்லத் தெரியாத புலவர் தலையைக் குழப்பிக் கொண்டிருந்தபோது, அவரின் பேரக் குழந்தை அதிலும் பெண் பத்துவயது நிரம்பாதவள், ''பாட்டா என்ன சிந்தனை?'' என்று கேட்டாள். நிலைமையை அறிந்ததும், ''நானே அரண்மனைக்குச் சென்று வருகிறேன்'' என்று புறப்பட்டாள்.

அத்தாணி மண்டபத்தில் அவளை அரசன் முன் நிறுத்தினார்கள். நீ யார்? என்று மன்னன் கேட்டபோது, ''நான் ஆஸ்தானப் புலவரின் மூன்றாந் தலைமுறை. அவரின் கடைக்குட்டியின் கடைக்குட்டி.'' உனக்கு என்ன வேண்டும்? நான் தங்கள் வினாக்களுக்கு விடை பகர வந்துள்ளேன். உன் பாட்டனார் எங்கே? தாங்கள் கேட்ட வினாக்கள் குழந்தைப் பிள்ளைகளுக்கேற்ற வினாக்களாதலால் நானே பதில்கூற வந்துள்ளேன். தாங்கள் பெரிய வினாக்களைக் கேட்டிருந்தால் பெரியவரான அவரே வந்து விடையளித்திருப்பார்.

சரி சொல்லு பார்க்கலாம் கடவுள் எங்கே இருக்கிறார்? மகாராசா மன்னிக்கவேண்டும். ஒரு பெரிய அண்டா நிறையப் பால் வேண்டும். உடனே மன்னன் கட்டளையின் படி பெரிய அண்டா நிறையப் பால் கொண்டுவந்து வைத்தனர். இந்தப் பாலில் வெண்ணெய் இருக்கிறதா இல்லையா என்று மன்னனைக் குழந்தை கேட்டாள். இருக்கிறது என்றான் அவன். எங்கே இருக்கிறது? பால் முழுவதிலும் எங்கும் பரவி இருக்கிறது. சரி கடவுள் இந்தப் பாரில் எங்கும் பரவி நீக்கமற நிறைந்திருக்கிறார்.

இரண்டாம் வினா: கடவுள் எந்தச் திசை நோக்கியவாறு இருக்கிறார்? சரி மகாராசா ஒரு மெழுகுவர்த்தி வேண்டும். [மெ]ழுகுவர்த்தி வந்தது. தாங்களே [கொ]ளுத்துங்கள். இப்[பொ]ழு[து] ... ஒளி எந்தத்திக்குநோக்கி இருக்கிறது. சொல்லுவீர்களா? என்று பெண் கேட்டாள். மன்னன் பிரமித்து எல்லாப்பக்கமும் நோக்கி நிறைந்திருக்கிறது என்றான்.

இதைப்போலத்தான் மன்னவா இறைவனும் எல்லாத் திசைகளையும் நோக்கியவாறு இருக்கிறார். சரி உங்கள் மூன்றாம் வினாவை வினவுங்கள். கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார்? மகாராஜா! இந்த வினாவுக்கு விடை சொல்வதற்கு நான் உந்தச் சிங்காசனத்தில் ஒரு சில நிமிட நேரம் இருத்தல் வேண்டும். மன்னன் ஆச்சரியத்தோடு ஆகட்டும் என்றான்.

குழந்தை சிங்காசனத்திலமர்ந்ததும் மன்னனின் அதிகாரக் குரலில் கட்டளையிடத் தொடங்கினாள். ''மந்திரி! சிறையிலிருப்பவர்களை உடனடியாக விடுவித்துக்கொள். வடபுலம் படையெடுத்த வீரர்களை உடனடியாக வரவழைத்துவிடு. நாட்டிலுள்ள ஏழைகளுக்கு நிலங்களை வரியின்றிப் பகிர்ந்துகொடு.

மன்னனுக்கு மூன்றாவது வினாவுக்கும் விடை விளங்கிற்று இறைவன் வினையை ஊட்டுவதும் வினையை நீக்குவதும் உயிர்களைப் பரிபாலிப்பதுஞ் செய்து கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தான்.

ஆஸ்தானப் புலவரின் செல்வப் பேரக்குழந்தைக்குச் சன்மானஞ் செய்து வழியனுப்பினான்.

சென்யோன் ஒவ் ஆக் படைகளைத் திரட்டிப் போர்க்களத்தில் வெற்றி பெற்ற வரலாறும், நைற்றிங்கேல் விளக்கேந்தி நோயாளரைப் பரிகரித்து நேர்ஸ் என்னும் தாதியர் சேவையை ஆரம்பித்ததும் எமக்குத் தெரியும்.

தம்பியார் மருணீக்கியார் வாழ வேண்டும் என்று திலகவதியார் தவம் செய்யப் புகுந்தபோது, அவரின் வயது பன்னிரண்டு நிறைந்து பதின்மூன்றாகும். திலகவதியார் செய்த திருத்தொண்டின் பயனாகவே எமக்குத் திருநாவுக்கரசுநாயனாரின் உழவாரத் தொண்டும் தேவாரத் தொகுதியும் கிடைத்தன.

— தொடரும்

# உலகமும் நாமும்

உலகம் உருண்டையானாலும் அது மிகவும் பெரியது. பரந்தது. உலகம் மங்கலகரமானது. அது உவத்தல் வேண்டும், வாழ்தல் வேண்டும் நம்மைக் கணித்தல் வேண்டும். இறைவன் உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் உலகம் யாவையும் தாமுள வாக்கியவன். உலகம் உவப்பவே ஞாயிறு உதிக்கிறது. அது மலர்தலை உலகம். அந்த உலகம் உயர்ந்தோர் மாட்டே என்பது தொல்காப்பியம். உலகத்தோடொட்ட வொழுகல் வேண்டும். உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் எதனைக் கற்றும் கற்காதவரேயாவர். உலகம் தமீஇய தொட்பம் மலர்தலும் கூம்பலும் இல்லாதறிவு என்றெல்லாம் பெரியவர்கள் கூறுவர். தமிழ் நாகரிகம் உலகத்துக்கு அஞ்சி வாழ்ந்தது. உலகத்துக்குக் கணக்குக் கொடுத்தல் வேண்டும் என ஒழுக்கத்தை உருவாக்கியது. ★

★ அற்பர்கள் பெரியவர் மரியாதையை அறியார்கள் ★

# ...வார பாலகர்



ஆகமங்களுக்கு அமைய‌த் திருக்கோயில்களை அமைக்கும் போது, அளவுப் பிரமாணத்தை அநுட்டித்துக் கர்ப்பக்கிருகம், விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், நந்தி, பலிபீடம், கொடிமரம், கோபுர வாயில், கோபுரம், சுற்றுப் பிராகாரம் முதலியனவற்றை அமைக்கிறார்கள்.

தூலலிங்கம் எனப்படும் கோபுரத்துக்குக் கீழே கோபுரவாயிலின் இரு புறங்களிலும் கெம்பீரமாக நின்ற நிலையில் காவல் காத்து நிற்கும் இரு பெரியவர்களை நாம் முதலில் பணிந்து அவர்களிடம் உத்தரவு பெற்றே உள்ளே புகுதல் வேண்டும் என்பது ஆலய தரிசன விதி.

கேட்காமல் போனால் என்ன என்று கேட்பவர்களுக்கு அவர்கள் இருவரும் வெறும் கருங்கற்களே. அங்ஙனம் போகின்றவர்களைத் தடை செய்வதற்கு ஒருவருமில்லை. ஆனால் அவர்கள் வழிபாடு சம்பிரதாயமில்லாத வழிபாடாய் முடியும்.



துவார பாலகர்களுக்கு நீண்ட கை, கால்கள் உண்டு. அவர்கள் நீண்டுயர்ந்து வளர்ந்தவர்கள். அவர்களின் பார்வையில் வெறும் காவல் குறிப்பு மாத்திரம் தொனிப்பதில்லை. அவர்களின் பார்வையிலும் முக மலர்ச்சியிலும் கையசைப்பிலும் ஒரு பெரிய தத்துவம் உண்டு. அவர்களிடம் நாம் பல இரகசியங்களைப் பார்த்தறிகிறோம்.

உள்ளே என்ன அற்புதம் என்று அவர்கள் வாய் விடாமல் சொல்லுகிறார்கள். உள்ளே எத்தனையோ மூர்த்திகளையும் மூல மூர்த்தி ஒன்றையும், எத்தனையோ எழுந்தருளிகளையும், பரிவார தெய்வங்களையும் நீங்கள் பார்க்கலாம். அவையெல்லாம் என்ன பிரமாதம்! அப்பப்பா. உள்ளே போங்கள். ஆனால் ஒன்று உங்கள் கருத்தில் இருத்தல் வேண்டும். அது என்னவென்று கேட்கின்றீர்கள். உள்ளே உள்ளது ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்று என்றது ஒன்றேதான். அஃது ஏகம் என்று கூறாமல் கூறித்தம் சுட்டுவிரலைப் பத்திரங் காட்டுமாப்போல் காட்டி நிற்பர்.

துவார பாலகர்கள் கோரைப் பற்களைக் கடித்து நின்றாலும் உற்றுப் பார்ப்பவருக்கு அவர்களின் சாந்த சொரூபம் புலப்படாமற் போகாது. எல்லாம் வல்ல இறைவன் சந்நிதானத்திலே புல்லும் பூவாக மாறும்போது, தண்ணீர் தீர்த்தமாக மாறும்போது, படையல் பிரசாதமாக மாறும்போது, கன்னெஞ்சன் கருணை வள்ளலாக மாறும் போது, கோரைப் பற்காரர் சாந்த சொரூபிகளாய்த் தோன்றுவதில் என்ன வியப்பு.

தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலி என்னும் துட்டர்கள் கேடுகள் செய்து வந்த காலத்தில் சிவபெருமான் திரிபுர சம்மாரஞ் செய்தபோது இவர்கள் அவரை வழிபட்டு அவருக்கு ஊழியஞ் செய்யும் பேற்றைக் கேட்டுப் பெற்று வாயில் காவலராய் இருவர் நிற்ப, மூன்றாமவர் உள்ளே முழவங்கொட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

துவார பாலகர் இருவருக்கும் சண்டன், பிரசண்டன் என்பன பெயர்களாகும். இங்ஙனமே விஷ்ணு ஆலயங்களின் கோபுர வாசலில் நிற்பவர் ஜயன், விஜயன் எனப் பெயர் பெறுவர். அம்மன் கோயில்களில் பாலகிகளின் பெயர்கள் ஹாபத்ரா, சுபத்திரா என்பனவாம். ★

## சுதந்திர சிங்கப்பூர்

கடல் கடந்த தூரதேசங்களில் சின்னஞ் சிறிய நாடுகளில் ஒன்றான சிங்கப்பூர் ஒரு சிறிய தீவு. யாழ்ப்பாணத்தாரை ஏன் தமிழரை வாழவைத்த நாடுகளில் அதுவும் ஒன்று. அது சுதந்திரமடைந்து சுயாட்சி செய்ய முயன்ற போது நிறுவிய சட்டசபையின் 51 அங்கத்தவருள் இருவர் தமிழர். அவர்கள் தங்கள் பதவிப்பிரமாணத்தைத் தமிழிலேயே எடுத்துக்கொண்டார்கள். ★

முற்றொடர்:-

## சென்ற ஆண்டில் இலங்கை

11. விதானைமார் நியமனம் பெற்றமை - 1806
12. கண்டி இராச்சியம் நீக்கப்பட்டமை - 1815
13. புகைப்படக் கருவி வந்தமை - 1856
14. சைக்கிள் வண்டி உபயோகமானது - 1880
15. கல்வித் திணைக்களம் நிறுவப்பெற்றது - 1869
16. றிக்ஷோ வண்டி வந்தமை - 1863
17. கொழும்பில் மின்சாரதீபம் வந்தமை - 1895

— தொடரும்

தன் எண்ணங்களால் உருப்பெற்ற ஓர் உருவமே மனிதன். — மகாத்மா காந்தி

★ ஒருவரின் அழகைவிட அவரின் கருணையே பெரியது ★

முற்றொடர்:

# நாவலர் நினைவுகள்



ஆறுமுகநாவலர் அவர்களைப் பற்றிக் கூறும்போது ஒரு சிலர் அவரை ஒரு வைதிகக் குடுக்கை என்றே தடித்த சைவன் என்றே மாத்திரங் கருதுகின்றனர். சிலர் அவர் பெரிய கண்டனகாரர், சாதிச் செருக்கு மிகுந்தவர் என்கின்றனர். சிலர் ஐயோ அந்த மனிசன் பெரிய கொழுவல் காரன் என்று கூறுகின்றனர். ஒரு சிலர் ஓமோம் அவர் நிரம்பப் படித்தவர், நல்ல ஒழுக்க சீலர் என்கின்றனர். இவ்வாறு தோள் கண்டார் தோளே கண்டார், தாள் கண்டார் தாளே கண்டார் என்று சொன்னாற்போல அவரவர் கண்டதையே கூறினர். அவர்கள் கூறியவை யாவும் முழுக்க முழுக்க உண்மையே.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அந்தப் பெருமகனார் 1877-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய பேதி நோயாலும், வைசூரி நோயாலும் அவற்றை அடுத்து நிகழ்ந்த கொடும் பஞ்சத்தாலும் பொது மக்கள் வாட்டமுற்றபோது, மனமிரங்கிச் செய்த கஞ்சித் தொட்டித் தருமம் முதலிய சமூக சேவைகளை என்னென்பது. பசிக் கொடுமையால் புல்லைத்தின்று வருந்தியவருக்கு வயிறு நிறையக் கஞ்சி கொடுக்க முன்வந்த வள்ளல் ஆறுமுக நாவலரன்றோ. தமது உத்தம சீடராய வர்த்தகர் சிலரை நெல்லை மலிவாக விற்குமாறு வற்புறுத்தியவரும் அவரன்றோ.

நோய்களின் வேகத்தையும் பஞ்சத்தின் கொடுமையையும் அறிந்து அவற்றுக்கு ஆவன செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்துமாறு, அக்காலத்துத் தமிழ்ப் பேசும் மக்களின் பெரும் பிரதிநிதியாயிருந்த சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கு அறிவித்தவரும் நாவலரன்றோ. அதன் பயனாகக் கொழும்பிலிருந்து, 21-6-1877 இல் சௌக்கிய சேவைத் துறைத் தலைவர் கின்சி என்பாரும், பொலிசு இராணுவத் தலைவர் கம்பெல் என்பாரும், நில அளவையாளர் நாயகம் வையர் என்பாரும் கப்பல் மார்க்கமாக இப்பகுதிக்கு வந்தார்கள். வைத்திய உதவிகள் செய்தார்கள்.

நாவலர் அவர்களைப் பெரியவர்கள் சைவப் பிரசாரகர் என்று கௌரவமாக வழங்கினர். அப்பெயரை அவரும் அங்கீகரித்திருந்தார். அதற்குக் காரணம் சைவ சமயத்தில் அவருக்கிருந்த பேரபிமானமும் பெரும்பற்றுமேயாம். திருக்கோயில்களில் நாவலர் அவர்களுக்குத் தனி மதிப்பிருந்தது. அவருக்குப் பெரிய குருக்களே திருநீறு வழங்கத் தலைப்படுவார். அவர் திருநீற்று மடலைத் தட்டத்தில் வைத்து நாவலரிடம் நீட்டுவார். நாவலர் கௌரவமாகத் திருநீற்றை எடுத்துக்கொண்ட பின்பே குருக்கள் ஏனைய குருக்கள்மார் உட்பட மற்றவர்களுக்குத் தங்கையால் திருநீறுவழங்குவார்.

நாவலர் அவர்கள் வில்லி புத்தூரர் இயற்றிய பாரதத்தை ஏன் பதிப்பித்தார் என்பதற்கு அவராக எதுவுங் கூறவில்லை. ஆனால் திருமயிலை [illegible] பெரியார் செந்தமிழ்ச் செல்வி பதி[illegible] [illegible] டாம் பரலில் ஒரு காரணங் கற்பித்திருக்கின்றார்.

இராசகோபாலபிள்ளை என்பவர் மகா சிவத்துவேசம் உடையவர். கோமனேஸ்வரன் பேட்டை என்பதில் ஈஸ்வர சப்தம் இருப்பதால் அதனைக் கோமனபுரம் என்று மாற்றியவர். இவர் அச்சிட்ட வில்லி புத்தூரர் பாரதத்தில் சிவபரமான அநேக பாடல்களை நீக்கிவிட்டனர். இதனாலன்றோ மகா பாரதத்தை நாவலரவர்கள் அச்சிடலானார்.

சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் 'நனவிலும் நன்னடை தணவாத சீலன்' என்று பாராட்டிய நாவலர் அவர்கள் சைவப் பிரசாரகராயும், உரையாசிரியராயும், நூலாசிரியராயும், பதிப்பாளராயும், பள்ளிக்கூடத் தாபகராயும், தேசத்தொண்டராயும், தரும சிந்தையாளராயும், பிறரைப் பாதுகாத்தவராயும் வாழ்ந்தார்.

— தொடரும்

## திருநீறு என்ன செய்கிறது

சிவபெருமானை நினைப்பிக்கிறது
ஊழி முடிவில் எஞ்சி நிற்பதைக் குறிப்பது
உடல் நாற்றத்தைப் போக்குவது
உடலுக்குத் தூய்மை தருவது
உடல் நோயைப் போக்குவது
உடலுக்கு உறுதி தருவது
உடம்புக்குக் கவசமாய் உள்ளது
முகத்துக்கு அழகையும் புனிதத்தையும் ஊட்டுவது
பாவத்தைப் போக்குவது
ஞானத்தைத் தருவது
பரகதியைத் தருவது

சமயதீட்சை பெறுபவர்கள் தாபனங்கள் மூலம் விண்ணப்பித்துத் திருநீற்றுப் பைக்கற்றுகளும் நித்திய கருமவிதியும் எம்மிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்
திருஆலவாய், காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## நேட்டோ நாடுகள்

நேட்டோ நாடுகள் என்பன அத்துலாந்திக் சமுத்திரத்தோடு சம்பந்தப்பட்ட நாடுகளின் கூட்டம்.

அவற்றை N. A. T. O. என்னும் ஆங்கில எழுத்துக்களால் குறிப்பர். அவை North Atlantic Treaty Organization எனப்படும். 'வட அத்தலாந்திக் பாதுகாப்பு ஸ்தாபனம். அதில் பிரிட்டன்' பிரான்ஸ் கனடா, மேற்கு யேமனி, ஒல்லாந்து, துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா ஒரு உடன்படிக்கை செய்துள்ளது. ★

எவனொருவன் யாருக்காவது அடிமையாவதை விரும்பவில்லையோ, அவன் கடவுளுக்கு அடிமையாக வேண்டும்.

— மகாத்மா காந்தி

★ திருட்டுத் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது ★

முற்றொடர்:

# சூரிய நமஸ்காரம்



## காயத்திரி

உலகுக்கெல்லாம் கண் போன்றவனும், உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்குக் காரணமானவனும், வேதவடிவினனும், முக்குணத்தால் மூன்று வடிவங் கொண்டவனும், பிரம்மா விஷ்ணு சிவன் வண்ணமாய் இருக்கிறவனுமாகிய சூரியபகவானுக்கு வணக்கம் என்பது காயத்திரி தோத்திரமாகும். சூரிய மந்திரத்துக்குக் காயத்திரி என்றும் பெயர்.

மந்திரங்களுக்கெல்லாம் தாய் போல விளங்கும் காயத்திரிக்குத் தெய்வம் ஸவிதாவாகிய சூரியன். ஸவிதா மூவுரு கொண்ட அறிவுக் கடவுளாகிய காயத்திரி.

காயத்திரி மந்திரத்தை வேதவித்து என்றும் கூறுவர். அது ஓங்காரம் என்னும் பிரணவத்தில் ஆரம்பிக்கிறது. ''யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக'' எனக் கூறுவது. இம் மந்திரத்தைச் சைவரும் வைஷ்ணவரும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்வர். அவனை வர்ணிக்கும் தியான சுலோகத்தின் பொருள் வருமாறு:

''செம்பருத்திப் பூப் போன்ற நிறமுடையவனும், காசிப முனிவரின் புதல்வனும், ஒளிமயமானவனும், இருளை மாய்ப்பவனுமாகிய சூரியனை அடியேன் வணங்குகின்றேன்''

காயத்திரி மந்திரங்களுள் மித்ரஸ்ய எனத் தொடங்கித் தூராத்ந அஸ்னோதி என முடியும் மந்திரம் பின் வரும் கருந்தமைந்ததாகும்.

''மழை முதலியவைகளால் உலகத்தைக் காக்கின்றவராகிய சூரியனின் மண்டலத்தை வணங்குகின்றேன். அது யோகிகள் அடையத் தக்கதாகும். சத்தியமானதும், விசித்திரமான ஒளியுள்ளதுமான அம் மண்டலத்தை வணங்குகின்றோம். தேவரீர் எல்லாவற்றையும் நன்கறிந்து எல்லோரையும் அவரவருக்கு ஏற்ற அலுவல்களில் தூண்டுகின்றீர். மித்திரராகிய தேவரீர் பூமியையும் ஆகாயத்தையும் தரிக்கின்றீர். மக்கள் செய்யும் புண்ணியம் பாவம் ஆகிய கருமங்களை நேராகப் பார்க்கின்றீர். சத்திய சொரூபியாகிய தேவரீருக்கு நெய்யுடன் அவிசைத் தருகின்றோம். நியமத்துடன் உமக்கு அவிசைத் தருபவன் அன்ன பானங்களுக்குத் துன்பப்பட மாட்டான். நீண்ட காலம் வாழ்வான் இப்பிறப்பிலாயினும் முற் பிறப்பிலாயினும் அவன் செய்த பாவம் அவனைத் தூரத்திலும் அணுகாது.''

ஆஸத்யேன எனத்தொடங்கி மனஸாபுனாது என முடியும் மந்திரத்தின் பொருள் வருமாறு:

அழிவற்ற ஒளிக்கதிர்களால் சூரியன் எங்கும் வியாபித்திருக்கிறார். தேவர்களையும் மனிதர்களையும் அவரவர் காரியங்களை அநுட்டிக்கும்படி செய்து கொண்டு பொன்மயமான தேரில் ஏறி அவரவர் கருமங்களுக்குச் சாட்சியாகப் பார்த்துக் கொண்டு சஞ்சரிக்கின்றார்.

இருளை நீக்கி மேலே பிரகாசிப்பவர் சூரியன். அவர் மற்றெல்லா ஒளிகளிலும் உயர்ந்தவர் தேவர்களையும். காப்பவர். சுயவொளியுள்ள சோதி சொரூபியாவர். இத்தகைய சொரூபத்தைப் பார்க்கும் நாங்கள் மேலான தேஜஸ் என்னும் பிரகாசத்தை அடைவோம்.

சூரியன் எல்லாம் அறிந்தவர் பிரகாசம் உள்ளவர் எல்லோரையும் தூண்டுபவர். எல்லோரும் தூலக்கண்ணால் பொருள்களைக் காணவும், ஞானக் கண்ணால் ஆத்ம சொரூபத்தை அறியவும், கிரணங்கள் அவரை மேலே தூக்கி நிற்கின்றன.

தேவருக்குச் சேனை போன்றவரும் மித்ரன், வருணன், அக்நி இவர்களுக்குக் கண்ணாக இருப்பவரும், மிகவும் விசித்திரமாக அமைந்தவருமான சூரியன் கிழக்குத் திசையில் உதயமாகின்றார். சூரியமண்டலம் ஆகாசம், பூமி எங்கும் வியாபித்திருக்கிறது. மண்டலாதிபதியான அவர் அசையும் பொருள், அசையாப் பொருள் ஆகிய அனைத்துக்கும் ஆத்மாவாக இருக்கிறார்.

தேவர்களுக்குக் கண்ணாகவும் நன்மையாகவும் கிழக்கே உதிப்பவரும், பிரகாசமுள்ளவருமான சூரியனை நூறாண்டுகள் பார்த்துக் கொண்டிருப்போம். நாம் நூறாண்டுகள் குறைவின்றி மகிழ்ச்சியோடு வாழுவோம்.

நூறாண்டுகள் நாம் இருக்கும் மேலான நிலையில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சூழ வாழ்ந்து அவரைப்பற்றி இனிய சொற்களையே பேசுவோம். இனிய சொற்களையே கேட்போம். கீர்த்தியுள்ளவராய்ப் பயமின்றி அவர் பெருமையைக் கூறிக்கொண்டு வாழ்வோம். பெருங்கடலின் நீரின் நடுவிலிருந்து உதயமாவதுபோல் தோன்றுகின்றார். வழிபடுபவரின் விருப்பத்தை அறிந்து எல்லாவற்றையும் கொடுப்பவரும், செந்தாமரைக் கண்ணனும், எல்லாம் அறிந்தவருமான அந்தச் சூரியன் என்னை ஆதரவுடன் காத்தருள்புரியவேண்டும். என்று கூறி கைவிரல்களுக் கூடாகச் சூரியனைப் பார்க்கவும்.

—தொடரும்


---

எங்களுக்கு ஆகப்பெரும் பகைவன் அன்னியனல்ல, அல்லது வேறெவனுமல்ல; நாமே எங்கள் பகைவர். அதாவது, எங்கள் இச்சைகளே.

— மகாத்மா காந்தி

---

★ மனச்சாட்சி வழிநடத்த நடப்பவனே மனிதன் ★



முற்றெடர்:

# சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி

முன்னர்சொன்ன அறிவு கடந்த சமய உண்மை ஒலித் துடிப்பிலும் உணர்த்தப்படும். எல்லாம் ஓம் என்னும் பரிசுத்தமான ஓரசைச் சொல்லில் அடங்கும். அதற்குள் எல்லா ஓசை ஒலிகளும் அதிர்வுகளும் அடங்கி நிற்கும். அவையாவும் அதனின்றே வருகின்றன. உலகில் நிலவு கின்றனயாவும் இணக்கமாயுள்ள ஒரேஒரு அடிப்படையும் அதுவேயாகும். இதேசமயத்தில் அநுபவ எல்லை தாண்டிய மெய்ம்மையும் அதுவேயாகும். அச்சொல் வேதங்களின் சாரமாயும் மந்திரங்களின் மந்திரமாயும் உள்ளது. கிறிஸ் தவ சமயத்தின் வாக்கேசன் என்னும் லோகோஸ், கிரேக்க நெடுங்கணக்கின் முதல் எழுத்தாய அல்பா வளர்ச்சி முடிவான ஒமேகா அது ஆதியும் அந்தமும் ஆனது. அதைவிட அதற்கு வேருக வேறெதுவுமேயில்லை. சிவநட னத்தில் நடராசன் ஒளிமயமான வட்டத்தில் ஆடுகின்ற அமைப்பு ஓம் என்னும் தமிழ் அமைப்பாகும்.

சிவநடனம் நிலையேற்றைக் குறிப்பதாகும். இதுவே படைக்கப்பட்ட உலகம். இறைவன் ஏன் ஆடுகின்ருன்? புனிதமும் பூரணமும் அமைதியும் நிறைந்த சுத்தவெளி இருப்பது ஏன்? இவையாவும் அறியப்படாத புதிர்களுட் புதிர்களாக இருக்கின்றன.

இதற்காகவே இந்துமதத்தில் லீலை என்றெரு ஒப்புமை அடிக்கடி கூறப்படுகிறது. நிலைபேற்றின் முழு அமைப்பும் இறைவனின் விளையாட்டன்றி வேறில்லை. அவன் விளை யாட்டைக் கூத்து என்பர். இதில் ஆன்மாக்கள் எனப் படும் உயிர்களின் பங்கு அத்திருவிளையாடல் என்னும் அற்புதத் திருக்கூத்தைக் கண்டுகளித்தல் ஒன்றேயாம்.

இத்திருக்கூத்து ஊழிக்காலம்வரை ஓயாது நடைபெறு கிறது. ஊழிமுடிவில் உலகம் முழுவதும் அழிக்கப்படுகிறது. அந்த வேளையில் சிவபெருமான் உள்ளக்களிப்போடு திருக் கூத்தாடுகின்ருர். அவர் உள்ளக்களிப்போடு ஆடும் ஆனந் தக்கூத்து, சுடுகாட்டிலே இடம்பெறுகிறது. அங்கே மாயத் தோற்றந்தரும் மயக்கமே தகிக்கப்படுகிறது. அம்மாயமும் அவரால் தரப்பட்டதேயாம். அதன்பின் அங்கே சுத்த வெளியைவிட வேறெதுவும் இருப்பதில்லை. அதைப்பற்றிப் பேசமுடியாது. அது சிதாகாசம் எனப்படுவது.

மேலே உள்ளது போலவே கீழேயும் உள்ளது. அண்டம் எனப்படும் அகிலத்தில் உள்ளது போலவே பிண்டம் என்னும் உயிரிலும் உள்ளது. சுத்தவெளி என் பது திறந்தவெளி, அது இருதயக்குகை எனவும் கூறப் படுவது.

அதைப் பொன்னம்பலம் அல்லது பொற்சபை எனக் கூறுவர். அங்கே அகங்காரம் நீங்கியவழி, மயக்கம் அறுந்த வழி இறைவன் திருக்கூத்தாடுகிரு... இதைக்... மேற்குத் தேட...ந்தவருக்கு விளங்காத பயங்கர அமைப்பை விளக்கலாம். பயங்கரம் என்பது தனிப்பட்டவர்களின் அகங்காரத்தைச் சார்ந்தது. இறைவனிடம் பயங்காரம் இருக்கமாட்டாது. பிருகதாரணய உபநிடதத்திலே இரண்டு உள்ள இடத்திலே அச்சம் உண்டாகும் என்று கூறப்பட்டுள்ளது.

— தொடரும்

முற்றெடர்:

# பர்த்ருஹரி நீதி

7. கல்விச் செல்வம் உள்ளவர்களிடம் அரசர், அமைச் சர் தம் பெருமையைக் காட்டலாகாது.
8. பரம தத்துவங்களை அறிந்த வித்துவான்களை அவர் கள் அவமதிக்கலாகாது.
9. நல்வார்த்தைகளுடன் கூடிய கல்வியே ஒருவனுக்கு அழகு.
10. கல்வி மேலோர்க்கெல்லாம் மேலானது. பிறதேசங் களுக்குப் போகும்போது கல்வியே தோழன். கல்வி யற்றவன் மிருகத்துக்குச் சமமானவன்.
11. பொறுமை உள்ளவர்களுக்குக் கவசம் தேவையில்லை. கோபம் உள்ளவருக்குப் பகைவர் தேவையில்லை. நண்பன் உள்ளவருக்கு மருந்து தேவையில்லை. துட் டர் இருக்குமிடத்தில் பாம்பு தேவையில்லை. விநயம் இருக்குமிடத்தில் ஆபரணம் தேவையில்லை. கவித் துவம் உள்ள இடத்தில் இராச்சியம் தேவையில்லை.
12. உறவினரிடத்துத் தாட்சணியம், வேலைக்காரரிடம் தயை, நல்லவர்களிடத்து அன்பு, பெரியவர்களிடம் பொறுமை உள்ளவரிடம் உலகம் கட்டுப்பட்டு நிற்கும்.
13. நல்லவர் சகவாசம் மந்தபுத்தியைத் தணிக்கின்றது, கௌரவ புத்தியை உண்டாக்குகிறது, கெட்ட செய் கையைத் தடுக்கிறது, மனத்தில் உற்சாகத்தை உண்டுபண்ணுகிறது, எங்கும் கீர்த்தியைக் கொடுக் கிறது.
14. பூங்கொத்துக்கும் தைரியம் உள்ளவருக்கும் இரண்டு புகலிடங்கள் உண்டு. ஒன்று தலையில் தலைமையாய் இருத்தல். அல்லது காட்டில் கிடந்து அழிவது.
15. துஷ்டரை நல்லவராக்கவும், மூடரை வித்துவான்க ளாக்கவும், பகைவரை நண்பராக்கவும், ஆலகால விடத்தை அமிர்தமாக்கவும் செய்யக்கூடிய சத் கரு மத்தையே நாம் செய்தல் வேண்டும்.
16. பூர்வகாலத்துப் புண்ணிய கர்மம் இருக்கும்வரை இப் பூவுலகில் சுகபோகங்கள் நமக்குக் கிடைக்கும். அது முடிந்தால், கயிறு அறுந்த ஊஞ்சல்போல நாம் வீழ்ச்சியடைதல் வேண்டும்.
17. உடம்பின் அமைப்பாயினும் அழகாயினும் குலமா யினும் பயன் தருவதில்லை. ஒருவன் முன் செய்து வைத்த வினை - பாக்கியமே நல்ல பயனைத் தருகின்றது.
18. வனத்திலும், போர்க்களத்திலும், பகைவர், தண் ணீர், நெருப்பு இவைகள் மத்தியிலும், நித்திரை யிலும் ஆபத்திலும் ஒருவன் செய்த பழைய புண் ணியமே காப்பாற்றுகின்றது.

★ சொல்லிலும் பார்க்கச் செயல்தான் வலுவுள்ளது ★

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் பெரியபுராணமும்



நாவலர் ஐயா அவர்கள் பெரிய புராணத்தைத் திருத்தொண்டர் பெரிய புராணம் என்று வழங்குவர். அவர் அதனைத் தம் இளமைக் காலந்தொடக்கம் பயபக்தியுடன் படித்துப் பாராயணஞ் செய்துவந்தவர். அவர் கலாசாலைக் கல்வியில் நன்றாக ஈடுபடுதல் வேண்டுமென்று கருதிய அவர்தம் தமையனுர் ஒருவர் உந்தப் பெரியபுராணம் என்ன கதைதானே என்று கூறியதைக் கேட்ட நாவலர் அவர்கள் அக்கூற்றுப் பெரிய பாவச்செயல் என்று கருதி அவரோடு உரையாடுவதைத் தவிர்த்து வாழ்ந்தார் என்பர்.

பெரியபுராணம் சிவபெருமானது திருவருளினுலே பாடப்பட்டமையால் அதனை அருட்பா என்பர். அது சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்திபெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத் திறத்தை விளக்குவது என்பர்.

இங்ஙனம் தாம் இளமைக் காலந்தொட்டு ஈடுபாடு கொண்டு போற்றிவந்த பெரிய புராணத்தை எல்லோரும் படித்தின்புற்று ஈடேறவேண்டுமென்று கருதி அதனை வசன ரூபமாக எழுதியுள்ளார். இன்னும் பெரியபுராணத்து முற்பகுதிக்குச் சூசனம் என்னும் விளக்கம் எழுதி, வேதங்கள், ஆகமங்கள், ஆகிய சைவசமய முதல் நூல்களின் தொடர்பை விளக்கியுள்ளார்.

## ★ யோகாசனம் ★

### புஜங்காசனம்

இந்த ஆசனத்தால் நல்ல பயனுண்டாகும். கூன் நிமிரும். பசி உண்டாகும். கழுத்து வலுவடையும். மலக்கட்டு நீங்கும். மலம் ஒழுங்காகக் கழியும். சல அடைப்பு நீங்கும். முதுகெலும்பின் மேற்பாகம் அசையுந் தன்மையும் உறுதியும் பெறும். இதனை ஐந்து முதல் பத்து விஞடிகள் சாதிக்கலாம். மூன்று முதல் ஆறு முறை செய்யலாம்.

செய்யும் முறை: முதலில் குப்புறப்படுத்துக் கால்களை நேராக நீட்டுதல் வேண்டும். உள்ளங்கைகளை மார்பை ஒட்டி ஊன்றுதல் வேண்டும்.

தலை, கழுத்து, முதுகு ஆகிய பகுதிகளைப் படிப்படியாக மெதுவாக உயர்த்திப் பின்புறமாக வளைத்து அண்ணாந்து பார்க்கவும். அடிவயிறு தரையில் அழுத்திக்கொண்டிருக்கச் செய்க. இந்நிலையில் சில விநாடிகள் இருந்தபின் முன்போல் பழைய நிலைக்கு வருதல் வேண்டும்.

மூச்சு:

உடம்பை உயர்த்தும் போது மெதுவாக உள்ளே இழுத்து, இறக்கும்போது மெதுவாக வெளியே விடுதல் வேண்டும்.

# சிவராத்திரி விழா

இம்முறை நாடெங்கும் சிவராத்திரி விழா நல்ல முறையில் நடைபெற்றது. திருக்கேதீச்சரத்தில் வழக்கம் போலப் பல்லாயிரம் அடியார்கள் நான்குசாமப் பூசைகளையும் விழித்திருந்து கண்டு பயன் பெற்றுர்கள். அடியார் பலர் ஆயிரக்கணக்காகப் பாரணம் செய்வதற்குச் சிவராத்திரி மடம், திருக்கேதீஸ்வர மடம் மிகப்பெரிய அளவில் அன்னம்பாலித்தன.

திருக்கேதீஸ்வரப் புகையிரதநிலையத்துக்குமுன் உள்ள வசதிகுறைந்த சூழலில் எல்லா வசதிகளையும் தற்காலிகமாக நிறுவித் தொண்டு செய்பவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

திருக்கேதீஸ்வரத்திலுள்ள சிவராத்திரி மடம் எத்தனை ஆயிரம் பேர் வந்தாலும் வாருங்கள் என வரவேற்று நல்லமுறையில் அன்னம்பாலித்தார்கள். திருவாசக மடத்தில் நான்குசாமப் பூசையும் வழிபாடும் அன்னபானுதிகளும் பாலிக்கப்பெற்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையாரின் மன்னுர்க் கிளையினர் நல்ல முறையில் பானுதிகள் வழங்கினுர்கள். இன்னும் நெடுஞ்சாலைப்பகுதியினர் முதலானேர் செய்த பணிகளையும் குறிப்பிடுதல் வேண்டும். சங்குப்பிட்டியில் பகலிரவாக முப்பத்தாறுமணிநேரமும் தொண்டர்கள் யாத்திரிகர்கள் அடியார்களுக்கு நீராகாரம் வழங்கினுர்கள். இவர்களுக்கெல்லாம் மில்க்வைற் தாபனமும் அண்ணு கோப்பி நிறுவனத்தாரும் ஊக்கமளித்து உதவியாக இருந்தார்கள்.

## குழந்தைகளுக்கு முதியவர் பாட்டு


தமிழ்நாட்டைச் சேர்ந்த புலவர் மயிலை - சிவமுத்து குழந்தைகளைக் கூப்பிட்டுக் கொஞ்சுங் குரலில் புத்தி சொல்லுகிறுர்.

தூணைப் பிடித்துச் சுற்றுதே
தரும்பைக் காதில் செருகாதே
காணும் பொருளைக் கேட்காதே
சண்டதைச் சுவைத்துப் பார்க்காதே.

நகத்தைப் பல்லால் கடிக்காதே
நங்கு காட்டி நகைக்காதே
நாணிக் கோணி நடக்காதே
நட்ட நடுவே துப்பாதே.

உண்ட வாயோ டுறங்காதே
ஊரார் சண்டையில் நுழையாதே
கண்ட இடத்தில் புரளாதே
காசு கேட்டுக் கெஞ்சாதே.

சோம்பி இருக்க விரும்பாதே
சாம்பலை மண்ணைத் தின்னுதே
தேம்பி அழுதடம் பண்ணுதே
தெருவில் அசுத்தம் செய்யாதே.



மில்க்வைற் தாபனத்தைச் சேர்ந்த
திரு. இ. தவகோபால் அவர்களுக்கு
உரும்பராயில் உள்ள ''ஹரி ஓம்'' இல்லத்தில்
வெகு சிறப்பாகத் திருமணம் நிறைவேறியது.
மணமகள்: செல்வி தேவராணி தர்மலிங்கம்

முற்றொடர்:

# தொகையகராதி

## மூன்று

**பிரபஞ்சம்**
தூலம், சூக்குமம், காரணம்

**பிரமத்தின்ரூபம்**
சகளம், சகளநிட்களம், நிட்களம்

**பிரஹ்மம்**
விராட்டு, இரணியகருப்பன், ஈசுவரன்

**பிராணயாமம்**
பூரகம், கும்பகம், இரேசகம்

**பிராரத்தம்**
இச்சை, அநிச்சை, பரவிச்சை

**பொருள்**
பதி, பசு, பாசம்

**பொறி**
மனம், வாக்கு, காயம்

**மண்டலம்**
அக்கினி, ஆதித்த, சந்திர

**மருந்து**
சல்லிய கரணி, சந்தான கரணி, மிருதசஞ்சீவினி

**மலம்**
ஆணவம், கன்மம், மாயை

**மாணாக்கர்**
முதல், இடை, கடை

## இலக்கியச் சொல்வரிசை

(அ. கு.)

1. அக்கதம் — அறுகரிசி
2. அக்கரம் — எழுத்து
3. அக்காரம் — சருக்கரை
4. அக்கு — எலும்பு
5. அக்குமாலை — உருத்திராக்க வடம்
6. அகக்காழ் — உள்வயிரம்
7. அகங்காரி — கெர்வமுள்ளவன்
8. அகந்தை — கெர்வம்
9. அகலம் — விசாலம்
10. அகலிடம் — பூமி
11. அகவல் — அழைத்தல்
12. அகவை — பிராயம்
13. அகாலம் — அல்லாத காலம்
14. அகிஞ்சை — கொல்லாமை
15. அகிதம் — தீமை
16. அகோசரம் — புலப்படாதது
17. அகோரம் — உக்கிரம்
18. அங்஗னம் — அத்தன்மை
19. அச்சுதன் — அழிவில்லாதவன்
20. அசடு — குற்றம்
21. அசம்பவம் — சம்பவியாதது
22. அசித்து — சடப்பொருள்
23. அஞ்ஞாதம் — அறியப்படாதது
24. அஞ்ஞாநி — அறிவிலி
25. அட்டகாசம் — பெருஞ்சிரிப்பு

— தொடரும்

## சிறுவர் ஆண்டில் மில்க்வைற் தாபனத்தின் சிறப்பு நிகழ்ச்சிகள்

சிறுவர் ஆண்டின் சிறப்பு நிகழ்ச்சிகளாக மில்க்வைற் ஸ்தாபனம் சென்ற இரு மாதங்களில் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தது. திருநெல்வேலியில் சிறுவர் நிலையத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு நல்லை ஆதீனப் பெரிய சுவாமிகளைக் கொண்டு சிவதீட்சை வைத்து நித்திய கருமவிதியும் விபூதிப்பைகளும் உபகரித்தது.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் சித்திரக் காட்சி வைபவத்தைத் திறந்து வைத்துப் பரிசுகளும் பராட்டுப் பத்திரங்களும் வழங்கியது.

மில்க்வைற் தாபனத்தைச் சேர்ந்த செல்வன் இ. தவகோபாலின் திருமண வைபவத்தின் நினைவாகத் திருநெல்வேலியிலும் கிளிநொச்சி குருகுலத்திலும் வாழும் சிறுவர்களுக்குப் பெருவிருந்தளித்துப் பென்சில் கொப்பி போன்ற உபகரணங்களும் வழங்கியது.

★ பழிவாங்குபவன் எதிரிக்குச் சமமானவன் ★

## பொதுநலவமைப்பு நாடுகள்

''உங்கள் இராணி எங்கள் இராணி, எங்கள் இராணி உங்கள் இராணி'' என்று ஒரு நாட்டவர் இன்னொரு நாட்டவரைப் பார்த்துப் பேசி உறவு கொள்ளும் ஒரு நாகரிகம் உருவான வரலாறு நூதனமானது. 'என் தம்பி உன் தம்பி' என்று முதலிற் சொன்னவன் இராமன். இராமனுக்குத் தந்தை வழியால் தம்பியர் மூவர் இருந் தமைபோல சர்வதேச சகோதரத்துவ முறையால் குகனும் சுக்குரீவனும் விபீடணனும் சகோதரராயினர்.

இந்தப் பாரம்பரியம் பாரதப் பண்பாட்டில் பழைய காலத்தில் வந்துள்ளது. இத்தகைய சகோதரத்துவமுறை பிரித்தானியப் பேரரசுக்குச் சொந்தமாயிருந்த பல நாடு களிடையே உருவான சம்பவம் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

பிரித்தானியரின் சம்பிரதாயங்களில் ஒன்று அவர்கள் தங்கள் பழைய வழமைகளைக் கை நெகிழவிடாமல் அவற் றுக்குப் புதிய நிலைமைகளை உருவாக்கிப் பேணிப்பாது காத்துக் கொள்வதாகும். பழையவற்றுக்குப் புதிய உப யோகங்களை உண்டாக்கிக் கொள்வதிலும் அவர்கள் ஒப் பற்றவர்கள். பிரித்தானியரின் பழைய நிறுவனங்களுள் ஒன்று முடி.

பிரித்தானிய அரசயாப்பில் முடி என்பது நாட்டின் ஒற்றுமைச் சின்னம். அது ஒரு காலத்தில் இங்கிலாந்து தேசத்துக்கு அப்பாலும் கடல் கடந்த நாடுகளில் பர பிரதேசங்களையும் பிணித்து நிலவியது. இந்த ஒற்றுமைப் பலம் வேண்டுமென்று உண்டாக்கப்படவில்லை. அது தானே உண்டானது. ஐரோப்பிய நாடுகளுள் இங்கி லாந்து, பிரான்சு, ஒல்லாந்து, போத்துக்கல், ஸ்பெயின், பெல்ஜியம் முதலியன கடல் கடந்த கண்டங்களில் பெரும் பிரதேசங்களைக் குடியேற்ற நாடுகளெனக் கைப் பற்றி ஆண்டு வந்தன.

கடற்படை வலிமை பெற்றிருந்த இங்கிலாந்து உல கில் ஐந்து கண்டங்களிலும் நாடுகளைக் கைப்பற்றிப் பெரிய பேரரசினை உருவாக்கியிருந்தது. அந்நாடுகளை யெல்லாம் ஒன்றுபடுத்தி நிலவச் செய்வதற்குப் பிரித் தானிய முடி ஓர் ஒற்றுமைச் சின்னமாய் விளங்கியது.

காலப்போக்கில் உலகில் நிலைமைகள் மாறியமையும் போது உண்டான கட்டாய மாற்றங்களினாலொன்றால் விளைந்த ஓர் உறவு முறையே ''உங்கள் இராணி எங்கள் இராணி, எங்கள் இராணி உங்கள் இராணி'' என்னும் அமைப்பாகும். இன்று பிரித்தானியாவிலுள்ள இரண் டாவது எலிசபெத் இராணியாரை கனடா, அவுஸ்தி ரேலியா, நியூசீலந்து முதலாய நாடுகளும் தங்கள் இராணி என்றே கருதுகின்றன.

முன்னர் பிரித்தானியப் பேரரசுக்குச் சொந்தமாயி ருந்த பல நாடுகளும் காலப்போக்கில் சுதந்திரம் பெற்றுத் தனி நாடுகளாய்த் தத்தம் அரசியல் அலுவல்களைத் தாமே கவனித்துக் கொள்ளும் தகுதிப் பாட்டைப் பெற்றுக் கொண்டன.

சுதந்திரம் பெற்றுத் தனிநாடுகளாக நிலவுவதற்குத் தகுதி பெற்ற நாடுகள் பல பிரித்தானிய முடியோடு தாம் முன்னர் கொண்ட தொடர்பினைத் துண்டித்து விட விரும்பாமல் ஒரு கூட்டத்தில் ஒரமைப்பில் நிலவு கின்றன. இன்னும் விளக்கமாக இதனை விரித்துக் கூறி னால், முன்னர் பிரித்தானிய முடியோடு அதிகார வலு வினால் பிணிக்கப்பட்ட இந்நாடுகள், பின்னர் அன்புப் பிடியில் அகப்பட்டு அதிலிருந்து அகலாமல் நிலவுகின்றன.

இந்த நாடுகள் யாவும் பூரண சுதந்திரமுள்ளவை என்பதால் எந்த ஒரு நாடும் வேறெந்த நாட்டுக்கும் எவ்விதத்திலேனும் எத்தகைய ஏற்றத்தாழ்வும் இல்லாமல் சமமாக நிலவுவதேயாம். இந்தக் கூட்டத்தினைப் பிரிய விடாமல் கட்டிவைத்துள்ள முடியை ஒரு அன்புப் பிடி என்றும், ஒரு பட்டு நாடா என்றும் கூறுவர். இந்த முடி பெரிய கோபுரவமைப்பின் சிகர நுனியாக விளங்குகின்றது.

பொதுநலவாய அமைப்பு என்றும், சமநலவாய அமைப்பு என்றும் வழங்கும் இக்கூட்டத்து நாடுகளின் சுதந்திரம் உவெஸ்மினித்தர் நியதிச்சட்டம் என்னும் பேராக்கத்தால் 1931ஆம் ஆண்டில் நிலைநிறுத்தப்பட்டது. இதன் பிரகாரம், பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்படும் எந்தச் சட்டமும் இந்நாடுகளில் செல்லு படியாகாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்பின் தனித்தனியாக இயங்கும் சுதந்திர நாடுகள் யாவும் தாமே விரும்பி ஒரு கருத்துப்பலத்தில் பிணிப்புண்டு அதன் சின்னமாக முடியை மதிப்பதாகத் தீர்மானித்தன. எனவே குடியரசுகள் என நிலவும் பல நாடுகளின் வசதியின் பொருட்டு முடியின் தகுதியில் சில மாற்றங்கள் அமைக் கப்பட்டன. 1937ஆம் ஆண்டில் ஆறுவது ஜோர்ஜ் மன் னர் முடிசூடியபோது அதன் அதிகாரத்தில் அடங்கியிருந்த நாடுகள் பல 1954 ஆம் ஆண்டில் இரண்டாம் எலிசபெத் முடிசூடியபோது அதன் அன்பில் பிடிபட்டிருந்தன.

இன்று பொதுநலவமைப்பு என்பது ஒரு கருத்துப் பலம். அது பிரித்தானிய இராணியைத் தலைவி என்பதில் ஓர் உணர்ச்சிபூர்வமான நட்பு. இதனால் உலகவிவகாரங் களைப் பொதுக் கண்ணோட்டத்துடன் ஆராய வாய்ப்பு இருக்கிறது. எந்த ஒரு நாடாவது ஆட்சேபிப்பதை அமைப்பினுள்ள நாடுகள் விவாதிப்பதில்லை. சமாதான முறையில் பரஸ்பர கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பளித்தல். எனவே நாடுகளின் நன்மைக்காகத் திட்டங்களையே மாற்றியமைத்துக்கொள்கின்றனர். முன் னர் இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று நிலவிய பட்டம் பின்னர் இராணி என்று நிலவுமாறு செய்துள்ளனர்.

முன்னர் 1925 ஆம் ஆண்டு முதலாக டொமினியன் அலுவலகமாக நிலவிய திணைக்களம் பின்னர் 1947 ஆம் ஆண்டுமுதலாகப் பொதுநலவாயத் தொடர்புத் திணைக் களமாகி நிலவுகின்றது. பாக்கிஸ்தான், இந்தியா, இலங்கை முதலிய நாடுகள் 1947ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றுத் தனி நாடுகளாக நிலவத்தலைப்பட்டன என்பதை நாம் அறிவோம்.

லண்டனிலுள்ள பொதுநலவாய அலுவலகம்மால்பரோ இல்லத்தில் 64 அடி நீளமான ஓர் அறையில் அமைந் துள்ளது. அங்கே 48 அடி நீள் வட்டமான பெரிய மேசை யும் சுற்றிவர ஆசனங்களுமுள்ளன. காலந்தோறும் நடை பெறும் பொதுநலவமைப்புப் பிரதமமந்திரிமார் மகாநாட் டிற் கலந்து கொள்ளும் தலைவர்கள் அங்கே கூடிக் கருத் துப்பரிமாறிக் கலந்தாலோசனை செய்வர். ★

★ உள்ளம் ஒழுங்கானல் செயலும் ஒழுங்காகும் ★

## இந்துப் பண்பாடு உருவாயிற்று

பூமிக்கு அடியில் பொன் வெள்ளி செம்பு முதலிய உலோகங்கள் உள்ளன. சுரங்கத்தில் கனிப் பொருளாய் எடுத்த பொன்னைச் சுடச் சுடரும், ஒளிவிடும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அந்தவகையில் மனிதகுலம் பண்படுதல், செப்பமாதல், சீர்திருந்துதல் எத்தனையோ விதமான திருத்தங்களுக்குப் பின்னர் உண்டாவதாகும். மேன்மேலும் திருந்தி வந்த மனநிலையே பண்பாடு என்பர்.

பண்பாடு உண்டாவதற்குச் சீலம், கல்வி, கலை, அறிவு, கருத்துநலம், நல்லுணர்ச்சி என்பன அழகுபெற உறவாடி நிலவுதல் வேண்டும். நிலத்தைப் பண்படுத்திக் கொண்டது போல் மனத்தையும் பண்படுத்திக் கொள்வதே பண்பாடு. இந்த முறையைத் திருநாவுக்கரசுநாயனுர் ஒரு தேவாரத்தில் அருமையாக அருளியுள்ளார்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கி
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே.

நிலத்தின் தன்மை பயிருக்கு உளதாகும் வகையில் தாயின் பண்பாடு குழந்தையில் பிரதிபலிக்கும் என்பர். தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பதில் ஓர் உண்மையும் உண்டு. நாரியர் உயர்ந்தால் நாடுயரும் என்று நாடோடியாகக் கூறப்படும் பழமொழியில் நிரம்பிய கருத்துண்டு. குடும்பத்தின் பண்பாடு சமூகத்துக்கு ஒளிவிடும் என்பர். எனவே தனி மனிதர் பண்பாடும் கிராம மாந்தர் பண்பாடும் இருமுச்சுப் பைகள்போல ஜீவாதாரமாயுள்ளன.

இவ் வகையாகப் பார்க்கும் போது குணநலனின் அறிவு நலம் பூத்துப் பொலியும் போது பண்பாடு மலர்ச்சியடைகின்றது. இந்த நலன்கள் மேன்மேலும் பக்குவமாகிச் சமுதாய நலத்தை மேலும் பேணுகின்ற மனப்பான்மை உண்டாகும் போது பண்பாடு கனிகின்றது. இந்தப் பக்குவ நிலை படிப்படியாகச் சோபான முறையில் முதிர்கின்றது. இதனைச் சீவன் முத்தி நிலைக்குத் திண்ணனுர் ஏறிச்சென்று திருக்காளத்தி ஈசருக்கு ஆட்பட்டுக் கண்ணப்பநாயனுரான வைபவத்தில் சேக்கிழார் கூறும் வகை குறிப்பிடத்தக்கது. ''பேணுதத்துவங்கள் என்னும் பெருகு சோபான மேறி'' என்பது அவர் வாக்கு. இங்ஙனமே பண்பாட்டின் எண்ணிறந்த படிகளை நம்மாழ்வாரும் குறிப்பிடுகின்றுர். ''வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே நானேறப் பெறுகின்றேன்'' என்பது அவர் வாக்கு.

தமிழ்ப் பண்பாடு சைவப் பண்பாடு சிறந்து விளங்குவது இலக்கியத்திலே தான். இலக்கியங்களில் இலட்சியங்கள் உள்ளன. வாழ்க்கையே இலட்சியத்தை நாடியே போய்க் கொண்டிருக்கிறது. சைவப் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதை அரண்செய்தது கல்வி. எழுத்துக்களைக் கண்டுபிடிப்பதன் முன்பு கல்வி கேள்வி வழியாக வந்தது. அது வாய் மொழியாக ஆசிரியர் [illegible]லிருந்து வெளிப்பட்டுச் செவி வழியாக மாணவரிடம் பதிந்தது.

தமிழ்ப் பண்பாட்டில் சமயப் பற்றுக் கலந்தபோது அது வீறுகொண்டெழுந்தது. தமிழ்ப் பண்பாட்டில் விருந்தோம்பல் சிறப்பிடம் வகித்து வந்தது. அதனுல் அவர்கள் வந்தாரை எல்லாம் வாழவைத்தனர். தாமும் வாழ்ந்தனர். வட நாட்டிலிருந்து வந்த வைதிகக் கொள்கைகளையும் தமிழர் வரவேற்றனர். பக்தி இலக்கியங்களும் தர்ம அர்த்த காம மோட்சம் என்பன பற்றிய நூல்களும் அதிகமாக எழுந்தன. அற நூல்கள் தமிழர் பண்பாட்டை வெகுவாக உயர்த்தின. ஒழுக்க நூல்களில் உலகம் போற்றும் திருக்குறள் எழுந்தது. அறம் பொருள் இன்பம் ஆகிய புருடார்த்தங்களை முப்பால்களில் விளக்கி அவைகளினிடையே அவற்றினூடாக வீட்டைப்பற்றி அறியவைத்தது. அன்ன விசாரம் நீங்கியபின் ஆன்ம விசாரம் உண்டானது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கோட்பாட்டின் உலக சகோதரத்துவத்தைக் கண்ட தமிழர் பண்பாடு விஜயநகர மன்னர் ஆட்சிக்குப் பின்னர் வெகுவாக வளர்ச்சி பெறவில்லை என்றே கூறவேண்டும்.

எனினும் இந்துப் பண்பாடு நாட்டின் பெருமையைக் காட்டுகிறது. அரசர்கள், அரசியல் தலைவர்கள், மடாதிபதிகள், புலவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் யாவரும் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். தமிழ் நாட்டு முடிமன்னர்கள் பழைய கோயில்களைப் புதுப்பித்தும் புதுக் கோயில்களைக் கட்டியும் கடவுட்தொண்டு செய்து வந்தமையால் அவர்களைக் கோயில் கட்டியகோ என உலகம் போற்றுகிறது. ★



## Divine Nectar

by

Swami Sivananda

1. You can get peace only in the Lord and not in the worldly objects.
2. The turbulent river becomes calm only after reaching the sea its destination. The turbulent wordly man gets peace only when he attains God - the Ocean of Peace.
3. The mountain is composed of tiny grains of earth. The ocean is made up of tiny drops of water. Even so, life is but an endless series of little details, actions, speeches and thoughts.
4. Virtues will develop and survive only when practised positively and actively.

★ நன்மையை அரைகுறையாகச் செய்தலாகாது ★

# ஆசாரம்

ஆசாரம் என்னும் சொல் அர்த்த புஷ்டியுள்ளது. சால்பு என்னும் பதத்தை இலகுவில் விளக்கிக் கொள்ள முடியாது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து தூண்களின் சிகரம் சால்பு என்பர். அங்ஙனமே ஆசாரமும் பல தூண்களின் மேல் கட்டப்படும் ஒருவகை ஒழுக்கக் கொத்தாகும். நன்னடத்தை மாத்திரம் ஆசாரமாகாது.

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல்களின் தொகுதியில் ஆசாரக்கோவை என்பதும் ஒன்று. ஆசாரம் என்பது மனம், வாக்கு, செயல் ஆகிய முக் கரணங்களாலும் நன்னடை ஒழுகி அந்த ஒழுக்கத்தின் முதிர்ச்சியும் உயர்ச்சியுமாகும். ஆசாரம் இல்லாதவனை வேதங்கள் கூட ஒன்றும் செய்யமாட்டாது என்பர். ஆசாரமில்லாதவனைச் சுத்திகரிப்பது முடியாத முயற்சி. ஈயம் பூசுவதன் முன் பித்தளைப் பாத்திரத்தைச் சுத்திகரிப்பதும், தளபாடங்களுக்கு மினுக்குப் பூசுவதன்முன் அழுத்தமாக்குவதும் போல ஆசாரத்தை அவசரமாகப் பூசிக்கொள்ள முடியாது. குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெல்லாம் நிலம் சுரக்கும் நிதியம் கணக்கில. நிலத்துக்குள்ளே மாணிக்கத்தையும் வைரத்தையும் புதைத்து விட்டு எடுப்பது நிலந்தரு திருவாகா அவை தாமே நிலத்தில் விளைவனவாதல் வேண்டும். ஆசாரம் குலதர்மம்.

குலதர்மத்தைப் பேணிப் பாதுகாத்து மக்களிடம் பயிற்றுவதாயின் முதல்வேலை நல்ல சிந்தனையோடு பாலூட்டுதல் உணவூட்டுதல் நித்திரையாக்குதல் ஆதியவற்றால் குழந்தை பண்போடும் பரிவோடும் வளரும். ஆசாரம் இல்லாமல் தார்மீகம் எதுவும் செய்யாது. பேய் அரசு செய்தால் சாத்திரங்கள் பிணந் தின்னும் என்பார்கள்.

ஆசாரமில்லாதவனுக்குக் கல்வி செல்வம் அழகு ஆரோக்கியம் தீர்க்காயுசு என்பன ஒன்றுமே பயன்படமாட்டா. கோழிச்சேவலும் எருத்து மாடும் விறுவிறுப்புடன் சில காலம் வாழ்ந்தாற் போல் ஆசாரமில்லாதவர் வாழ்வும் சில காலம் ஆடம்பரமாயிருக்கும். அதனால் எவருக்கும் பயனில்லை. உள்ளம் ஒருமுகப் படாதவனுக்கு அமைதி ஏது சாந்தி ஏது.

குரூரம் இல்லாமல் தர்மவழியிலே விவேகத்தோடு மற்றவர்களுக்கு எவ்வித இடையூறுமில்லாமல் வாழ்பவன் ஆசாரத்தை அறிந்தவன். ஆசாரமுள்ளவன் உள்ளமும் உடம்பும் உடையும் சுத்தமாயிருப்பவன். திரிகரண சுத்தி காரிய சித்தியை அளிக்கும்.

ஆசாரம் உள்ளவன் உடற்சோம்பல் உளச்சோம்பல் என்பனவற்றை அறியமாட்டான். அவன் அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்தவுடனேயே வைகறை யாமம் துயில் எழுந்து செய்வன இன்னவை என்று ஆசாரக் கோவை குறிப்பிடுகிறது. மலசலங் கழித்தல் எங்கே எப்படிக் கழித்தல், கழித்தபின் எவ்வாறு சௌஷம் செய்தல், எவ்வாறு பல் துலக்குதல், எவ்வாறு நீராடுதல் எவ்விதமாக உடையணிதல் என்றெல்லாம் ஆசாரங்கள் கோவையாக உள்ளன. தந்தை தாயரை வணங்குதல் முந்தையோர் பாரம்பரியமாகச் செய்து வந்த தமிழாசாரம் பண்பாடு ஆசாரக்கோவையோடு நோயணுகா விதிகளும் கலந்துள்ளன. வீட்டிலும் வெளியிலும் வீதியிலும் சபைகளிலும் நடந்து கொள்ளும் நடைப் பழக்கமும் நட்பும் தயையும் கொடையும் கூறப்பட்டுள்ளன.

நீராடுவதால் வெறும் உடல் அழுக்கு மாத்திரம் போவது என்பதல்ல. உடம்பிலுள்ள உறுப்புக்கள் நாடி நரம்புகள் உறுதி பெறுவதோடு மனமகிழ்ச்சியும் வேகமும் சாந்தமும் மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் இன்னும் பல நன்மைகளும் உண்டாகும். நீராடுவதால் வலிமை, அழகு, குரல், இனிமை, தூயநிறம், மெதுவான ஸ்பரிசம், நல்ல கந்தம், சுத்தம், செல்வம், சுகுமாரம் என்பன கிடைக்கும் என்பர். சுத்தம் தெய்விகத்துக்கு இரண்டாவதாய் உள்ளது. நீராடாமல் பூசை தியானம் தானம் செய்தலாகாது. நீராடுதல் புண்ணியத்தைத் தருவது. சென்றுடு தீர்த்தமாயும் செழு நீர்த்திரளாயும் சிவபெருமான் இருக்கிறார். பொங்கு மடுவில் புகுந்து ஆடேலோரெம்பாவாய் என நீராடுதல் திருமுறைகளிலும் போற்றப் பெறுகிறது. ஆலயங்களின் அருகே தீர்த்தமும் அமைகிறது. தீர்த்தமாடுதல் ஒரு விதி. எங்கே குளிக்கலாம் எங்கே குளிக்கக் கூடாது என்றும் விதிகள் உள்ளன. எப்படி நீராட வேண்டும் என்பதையும் ஆசாரக்கோவை கூறுகிறது. காய்ந்த தலையானும் அதனை நீத்துக் கண்டத்தளவில் நீராடார் ஆராய்ந்த அறிவினையுடையவர். அந்தரங்க அறையிலாயினும் ஆடையில்லாமல் நீராடலாகாது. உடுத்த ஆடையைக் கழற்றி வைத்து விட்டு நீராடிய பின் அதனையே மீண்டும் அணிதல் அநாசாரம்.

ஸ்நானம் என்றால் நீராடுதல் என்றே கருதுகிறோம். நீரில்லாமலும் ஸ்நானங்கள் சொல்லப் பட்டுள்ளன. அவை சாஸ்திர ரீதியாகச் சில சமஸ்காரங்களுக்காக விதிக்கப் பட்டவையாகும். இன்னும் நோயாளிகள் வெந்நீரில் குளிப்பதும், வெந்நீரில் நனைத்த துணியால் உடம்பைத் துடைத்துக் கொள்வதும் நீரைப் புரோட்சித்து மந்திரத்தால் சுத்திகரித்துக் கொள்வதும் உண்டு.

## மார்ச் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 3 | சனி | — | முன்னைநாதர் கொடியேற்றம் |
| 4 | ஞாயிறு | — | கார்த்திகை விரதம் |
| 6 | செவ்வாய் | — | கச்சியப்பசிவாசாரியார் குருபூசை |
| 9 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 11 | ஞாயிறு | — | ஆயிலியம் - பிரதோஷ விரதம் |
| 12 | திங்கள் | — | மாசிமகம் - நடேசர் அபிஷேகம் |
| 13 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| 17 | சனி | — | காரைக்காலம்மையார் குருபூசை |
| 23 | வெள்ளி | — | வண்ணை வைத்தீஸ்வரர் கொடி |
| 25 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 27 | செவ்வாய் | — | அமாவாசை விரதம் |
| 29 | வியாழன் | — | மருதடிவிநாயகர் கொடி |
| 31 | சனி | — | கார்த்திகை விரதம் |

வணக்கம் உள்ளத்திலிருந்து எழ வேண்டும், குரலினுண்டாவதல்ல, உள்ள உணர்ச்சியில்லாவிட்டால் சொற்களுக்குப் பொருளில்லை.

— மகாத்மா காந்தி

★ இன்ப துன்பங்களில் சமமாய் நடப்பவனே நண்பன் ★

இந்து சமய பாடத் திரட்டு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர
(சாதாரண) தரம்
சைவசமய பாடம்

★ 1979 இல் ஒன்பதாம் தரம்
★ 1980 இல் பத்தாம் தரம்

இவற்றுக்கான புதிய பாடத் திட்டத்துக்கமைய
மில்க்வைற் செய்தி ஆசிரியர்
க. சி. குலரத்தினம்
எழுதிய புதிய விரிவான நூல்
இம் மாதம் வெளிவருகிறது.

வெளியிடுவோர்:-
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## லண்டனில் மகாசிவராத்திரி வைபவம்.

லண்டனில் எசெக்ஸ் மாநிலத்தில் விக்போட் என்னும் இடத்தில் பிரியன் கார்டின்ஸ் என்னும் இல்லத்தில் மகா சிவராத்திரி விழா வெகு சிறப்பாகப் பலகலை நிகழ்ச்சிகளோடு நடைபெற்றது. இவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ்—சைவசமய வகுப்புகளை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு வேண்டிய நூல்களை மில்க்வைற் தொழிலதிபர் அனுப்பியுள்ளார்.

## குசேல சம்பத்தும் குபேர சம்பத்தும்.

குசேலர் சரித்திரத்தைப் படிப்பவர் இப்படி நடந்ததோ என்று அங்கலாய்ப்பார்கள். குசேலசம்பத்துள்ள நம்மவர் சின்னையா என்னும் பெரியாரும் அவர் மனைவியார் வள்ளித் தாயாரும் இல்லறம் நடத்தி ஒரே மனையில் 24 பிள்ளைகளைப் பெற்றார்கள். இவர்களில் 22 பிள்ளைகள் இன்று பெரியவர்களாய் வாழுகின்றார்கள். சிங்கப்பூரில் சுகபோகங்களோடு குபேர சம்பத்துள்ள சின்னையா பெரிய வள்ளல். மனைவி வள்ளித்தாய் தாய்மை மனப்பான்மையில் உமாதேவியார் போன்றவர். மனையிலுள்ள பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போதாவென்று உலகெங்கும் உள்ள ஆதரவற்ற பிள்ளைகளை வாரி அணைக்கின்றார். மாளிகையில் மேன்நாட்டு நாகரிகத்தில் வாழும் சின்னையர் சைவக்கோயில்களில் ஈடுபாடு கொண்டவர். ஆலயங்களைப் பரிபாலிக்க உதவுபவர். வயது முதிர அனுபவ ஞானம் முதிரப் பழைய ஆசாரங்களை மீளவும் கைக்கொள்ள விரும்பி மில்க்வைற் தொழிலதிபரிடம் சமய நூல்களைப் பிரசாதமாகப் பெற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி காண்கின்றார். இனிமேல் தாம் வேட்டி சால்வை அணிய விரும்புவதாக எழுதுகிறார்.

சின்னையரும் வள்ளித்தாயாரும் இன்னும் பல தர்மங்கள் செய்யப்போகிறார்கள்.

வாழ்க இவர்கள் பணி.


மில்க்வைற்
சலவைப் பவுடர்




கவர்ச்சிகரமான மட்டைப் பெட்டிகளில் விற்பனையாகின்றன.

மாணவிகளின் சீருடைகளைப் பால்போல் வெண்ணிறமாக்குவதற்கு மிகவும் சிறந்தது.

நீலம் கலந்த இந்தப் பவுடர் துரிதமாக அழுக்கை நீக்குகிறது.

வெந்நீரில் சிறிது நேரம் ஊறவிட்டால் வெண்மை அதிகமாகும்

உடனடியாக உபயோகித்துப் பாருங்கள்.
மில்க்வைற் சலவைப் பவுடர்


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-3-79.